# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003. ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2003 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2003 யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 62/2002
4692

## 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். குறுந்தலைப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் ஏழாம் பிரிவு, "சூதாட்டம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் "விங்ட்சும், அதிஷ்டச் சக்கரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விங்ட்சும், ருஜினோ அல்லது அதிஷ்டச் சக்கரம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

(1) அவ்வட்டவணையின் முதலாம் பாகத்தில் "ஐந்து இலட்சம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முப்பதினாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்முலமும் ;

(2) அவ்வட்டவணையின் இரண்டாம் பாகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதை இடுவதன்மூலமும் :—

"பாகம் II

இதற்கான நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ஆள் ஒருவரினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான நிரையின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகைக்கு சமமாதல் வேண்டும்.

(அ) சூதாட்ட தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு

| நிரை I ஆண்டு | நிரை II விதிப்பனவுத்தொகை |
|---|---|
| 1988 ஏப்பிறல் 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ஆனால் 2001 ஏப்பிறல் 1க்கு முன் | பத்து இலட்சம் ரூபா |
| 2001 ஏப்பிறல் 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஆண்டுக்கு ஆனால் 2002 ஏப்பிறல் 1க்கு முன் | இரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபா |

(ஆ) சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு (ருஜினோ விளையாடுவது தவிர்ந்த வேறு)

| | |
|---|---|
| 2002 ஏப்பிறல் 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஆண்டு ஒவ்வொன்றுக்கும் | ஒரு கோடி இருபது இலட்சம் ரூபா |

(இ) ருஜினோ விளையாடும் தொழிலை மட்டும் கொண்டு நடாத்துவதற்கு

| | |
|---|---|
| 2002 ஏப்பிறல் 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஆண்டு ஒவ்வொன்றுக்கும் | ஐந்து இலட்சம் ரூபா" |

4. 2002 ஏப்பிறல் 1 ஆம் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஆண்டுக்கு முதன்மைச் சட்டத்தின்கீழ் விதிப்பனவைச் செலுத்துவதற்குப் பொறுப்பான எவரேனுமாள் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் அத்தகைய விதிப்பனவை ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்து மிடத்து, அத்தகைய ஆள் அது சார்பாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட விதிப்பனவுக்கு மேலதிக மாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெற உரித்து டையதாதல் வேண்டும். மீளச் செலுத்துதல்.

5. 2002 ஏப்பிறல் 1 ஆம் திகதி அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் ஆண்டுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எவரேனுமாள், இச்சட்டம் தொடங்கும் திகதியில் அத்தகைய விதிப்பனவைச் செலுத்தத் தவறியுள்ளவிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்களுள் இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வருமதியான விதிப்பனவை செலுத்துமிடத்து, சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியதாகக் கருதப்படலாகாது. விடுபாட்டு உரிமை.

6. இச்சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்துக்கு செய்யப் பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 ஏப்பிறல் 1 ஆம் திகதி வலுவுக்கு வந்ததாகக் கருதப்படல் வேண்டும். கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.